**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF M/S. ADITYA DURGA AGGREGATES PVT., LTD., OVER AN EXTENT OF 4.87.88 HEC (TOTAL CLUSTER AREA 13.93.38 HEC) LOCATED IN S.F.NO. 124/30,124/31,124/32,124/33,117/1,117/5,117/6,117/4,117/12B,117/2,141/2B2(P),141/2B1,124/17,124/22,124/23,124/24,124/25A,124/25B,124/35A,124/34,124/35B,124/16,124/29,124/6,124/7,124/11,124/36,124/14,124/15,141/2C1,141/2C2,141/2E2(P),141/3(P),141/4(P),117/7,124/8A,124/8B,124/12,124/18,124/9,124/10,124/13,124/19, 124/20 and 124/21 POONAITHANGAL VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.10.2023 AT 10.00 AM IN M/S. R.S.E MAHAL, MAMANDUR, POONGAVANA KUMARASAMY NAGAR, NO. 316/N, KANCHIPURAM TO VANDAVASI ROAD, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI-631 702.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Dr. M. Priyadharshini | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Dr.P. Kamaraj | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Thiru: M. Mahaboob Khan | Assistant Geologist,<br>AD Mines Office,<br>Tiruvannamalai. |
| 6. | Publics and Environmentalists | 72 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone and gravel quarry.

The District Environmental Engineer stated that for obtaining the environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed Rough stone and Gravel Quarry of, M/S. Aditya Durga over on extent of 4.87.88 hectare in Poonaithangal Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the minutes will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing was published in New Indian Express (English) & Daily Thanthi (Tamil) on15.09.2023 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed rough stone quarry of, M/S. Aditya Durga Mining of Rough Stone and Gravel Quarry.

Further, the District Environmental Engineer informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the Environment Impact Assessment Authority.

The District Revenue Officer requested the project proponent to explain the EIA study conducted by them to the public in detail.

On behalf of the project proponent Thiru. B. Swaminathan, the Consultant, M/s. Creative Engineers & Consultants, Chennai welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

Then the Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

The following are the views represented by the public.

**1. Mr. Emmanuel, Poonaithangal Village.**

He said, If this quarry is conducted under government regulations, our villagers will definitely cooperate with this quarry. He also asked that it would be good if you could explain what would be the benefit for us, if this quarry is located in our town?

The consultant replied that 27 local people will get employment and we have allocated Rs 5 lakh for schools and basic facilities. Also the explosives are placed in such a way that there is no noise when placing them. He explained that only compostable plastics will be used.

The person who replied to this said that if this quarry is carried out in accordance with these regulations, you will have our cooperation. He concluded his speech by saying thanks.

**2. Mr. S. Kandhan, Poonaithangal Village (Municipal Council President),**

He said, The upcoming quarry is one kilometer away from our village. So there is no harm to us. We benefit greatly from the financial support this quarry provides to our village, so we are not affected by this quarry. He concluded his speech by saying thanks.

**3. Mr. R. Murugan, Poonaithangal village.**

He said, You are well aware of the Environment Protection Act 1986 under Article 253 of the Constitution of India. Ground water in our area will be highly polluted and agricultural land will suffer greatly. We have no objection to the construction of this stone quarry. But you said that heavy vehicles should be driven only for eight hours a day. But they drive on that road more than 100 times. This makes the road very polluted. They are not sprinkling water on roads. It would be better if heavy vehicles are banned from 8.00-9.30 am, 12.00-1.30 pm and 4.00-5.30 pm when students go to school. Thus our people are prone to cataracts and tuberculosis due to pollution. So I humbly request the Environment Protection Officer to ask

them to slow down the heavy vehicles and provide water sprinkling facility on the roads.

The District Environmental Engineer responded to this and replied that their comments will be recorded and forwarded to the State Environmental Impact Assessment Authority. He also concluded his speech by explaining that through our department and the Mining Department, we are asking and monitoring them to adhere to their views.

**4. Mr. Nandhagopal, Poonaithangal Village (Municipal Council Deputy Chairman).**

He said, We have no objection to construct this quarry in our village. He concluded his speech by saying thanks.

**5. Mr. Venkatesh, Environmentalist.**

He said, I welcome this quarry. Because I hope this quarry will create employment. But the heavy vehicles of this quarry have to go with speed limit. A lot of saplings should be planted. A medical check-up should be done for these villagers once in six months. He ended his speech by saying thank you for this opportunity.

**The following 09 members of the public have expressed their opinion in writing that they have no objection to the operation of this quarry. They have also requested to provide them with employment opportunities in the proposed quarry.**

| S.No | Name | Place |
|---|---|---|
| 1 | R. Vemkatesan, Bangalore | Expressed support in favour of the unit |
| 2 | K. Govardhan, Hyderabad | Expressed support in favour of the unit |
| 3 | T. Anil Reddy, Telegana | Expressed support in favour of the unit |
| 4 | Mallareddy Somireddy, Telegana | Expressed support in favour of the unit |
| 5 | Paloju Sydaiah, Hyderabad | Expressed support in favour of the unit |
| 6 | S.K. Rahman, Andhra pradesh | Expressed support in favour of the unit |
| 7 | A. Gopal Reddy, Hyderabad | Expressed support in favour of the unit |
| 8 | S.K. Chary, Telegana | Expressed support in favour of the unit |
| 9 | Mr. S. Kandhan, Poonaithangal Village (Municipal Council President), Tiruvannamalai | Expressed support in favour of the unit |

**Thereafter no views/comments were raised.**

This public hearing process came to an end with the vote of thanks by Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 15.09.2023 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 6 & 72 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting and social media- 09 numbers.

DEE/TNPCB,
Tiruvannamalai.

District Revenue Officer,
Tiruvannamalai.

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், பூனைத்தாங்கல் கிராமம், புல எண்.124/30, 124/31, 124/32, 124/33, 117/1, 117/5, 117/6, 117/4, 117/12B, 117/2, 141/2B2(P), 141/2B1, 124/17, 124/22, 124/23, 124/24, 124/25A, 124/25B, 124/30,124/31,124/32,124/33,117/1,117/5,117/6,117/4,117/12B,117/2,141/2B2(P), 141/2B1, 124/17,124/22,124/23,124/24, 124/25A, 124/25B, 124/35A, 124/34,124/35B,124/16,124/29,124/6,124/7,124/11,124/36,124/14,124/15, 141/2C1,141/2C2,141/2E2(P),141/3(P),141/4(P),117/7,124/8A,124/8B, 124/12, 124/18,124/9,124/10,124/13,124/19,124/20,124/21, 4.87.88 ஹெக்டேர் (மொத்த கூட்டுபரப்பளவு 13.93.38 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஆதித்யா துர்கா பிரைவேட் லிமிடெட் கல் மற்றும் கிராவல் குவாரி நடத்தி மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு 18.10.2023 அன்று தி/ள். R.S.E மஹால் மாமண்டூர், பூங்காவன குமாரசாமி நகர், No. 316/N, காஞ்சிபுரம்– வந்தவாசி சாலை வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவர். மு. பிரியதர்ஷினி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | முனைவர்.பா. காமராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | திரு. மு. மஹபூப்கான் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (72 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள

பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், பூனைத்தாங்கல் கிராமம், மொத்தம் 4.87.88 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். ஆதித்யா துர்கா பிரைவேட் லிமிடெட் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள் ஆதித்யா துர்கா பிரைவேட் லிமிடெட் கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். R.S.E மஹால் 18.10.2023 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் செய்தி தாள்களில் 15.09.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு. B. சுவாமிநாதன், ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும், தி/ள். கிரியேட்டிவ் இஞ்சினியர்ஸ் & கன்சல்டன்ஸ், சென்னை நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு.. இம்மானுவேல், பூனைத்தாங்கல் கிராமம்.</u>

இவர் கூறுகையில், இந்த குவாரியானது அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டால், இந்த குவாரிக்கு எங்கள் கிராம மக்களின் ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும். அதேபோல் இந்த குவாரி எங்கள் ஊரில் அமைவதால் எங்களுக்கு என்ன பயன் இருக்கும் என்று விளக்கம் அளித்தால் நன்றாக இருக்கும் என்று வினாவினார்.

இதற்கு பதிலளித்த ஆலோசகர், உள்ளூர் மக்கள் 27 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், பள்ளிகள் மற்றும் அடிப்படை வசதிகளுக்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளோம். மேலும் வெடி மருந்து வைக்கும் போது சத்தம் வராத வகையில் வைக்கப்படும். கம்போஸ்டபிள் பிளாஸ்டிக் மட்டுமே உபயோகிக்கப்படும் என்று விளக்கம் அளித்தார்.

இதற்கு பதில் அளித்த அந்த நபர் இவ்வாறு விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த குவாரி நடத்தப்படுமாயின் எங்களது ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும். நன்றி. என்று கூறி விடை பெற்றார்..

2. திரு.. S. கந்தன், பூனைத்தாங்கல் கிராமம் (ஊராட்சி மன்றத் தலைவர்),

இவர் கூறுகையில், அமையவிருக்கும் இந்த குவாரியானது எங்கள் கிராமத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அதனால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. இந்த குவாரி எங்கள் கிராமத்திற்கு அளிக்கும் நிதி உதவியால் நாங்கள் மிகவும் பயன் பெறுகிறோம், ஆகவே இந்த குவாரி வருவதில் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. நன்றி. என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

3,. திரு. ஆர். முருகன், பூனைத்தாங்கல் கிராமம்.

இவர் கூறுகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் 253 வது பிரிவின்படி சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 தங்களுக்கு நன்றாகவே தெரியும். எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் மிகவும் மாசுபடும் மற்றும் விளைநிலங்கள் மிகவும் பாதிக்கப்படும். இந்த கல்குவாரி அமையவிருப்பதில் எங்களுக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை. ஆனால், கனரக வாகனங்களை நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் மட்டுமே ஓட்ட வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். ஆனால் அவர்கள் 100 முறைக்கும் மேல் அந்த சாலையில் வாகனங்களை ஓட்டிச் செல்கிறார்கள். இதனால் சாலை மிகவும் மாசு படுகிறது. தண்ணீர் விடுவதே இல்லை. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லும் நேரமான காலை 8.00–9.30 மணி வரை மதியம் 12.00–1.30 மணி வரை மற்றும் மாலை 4.00–5.30 மணி வரை கனரக வாகனங்களை தடை செய்தால் நன்றாக இருக்கும். இவ்வாறு சாலைகளில் தண்ணீர் விடாமல் இருப்பதால் அந்த மாசுவின் காரணத்தினால் எங்கள் மக்களுக்கு கேட்டரக்ட் (கண் பொறை) மற்றும் டியூபர்குளோசிஸ் (காச நோய்) வரும் வாய்ப்புகள் உள்ளன. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி அவர்கள் கனரக வாகனங்களை மெதுவாக செல்ல வைத்து சாலைகளில் தண்ணீர் தெளிக்கும் வசதியையும் செய்து தர வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தங்களுடைய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு அனுப்பப்படும். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துறை மூலமாக தாங்கள் கூறிய கருத்துக்களை கடைபிடிக்க அறிவுறுத்தி கண்காணிக்கிறோம் என்று கூறினார்.

4. திரு. நந்தகோபால், பூனைத்தாங்கல் கிராமம் (ஊராட்சி மன்றத் துணை தலைவர்).

இவர் கூறுகையில், எங்கள் கிராமத்திற்கு இந்த குவாரி வருவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சப்பனையும் இல்லை. நன்றி. என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

5. திரு. வெங்கடேஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர்.

இவர் கூறுகையில், இந்த கல்குவாரியை நான் வரவேற்கிறேன். ஏனெனில், இந்த குவாரி வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்று நம்புகிறேன். ஆனால், இந்த குவாரியின் கனரக வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டுடன் செல்ல வேண்டும். அதிக அளவில் மரக்கன்றுகளை நட வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இந்த கிராம மக்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். இந்த வாய்ப்பளித்துமைக்கு நன்றி எனக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

கீழ்கண்ட 9 நபர்கள் எழுத்துமூலமாக தங்ளுக்கு இந்தகுவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் அமையயிருக்கும் குவாரியில் தங்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சாலையை சீரமைப்பு ஏற்படுத்தி தரும்படியும் கேட்டுக் கொண்டுள்ளனர்,

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | ரா.வெங்கடேசன், பெங்களூர் | ஆதரவு தெரிவித்தார் |
| 2 | க. கோவர்தன், ஐதராபாத் | ஆதரவு தெரிவித்தார் |
| 3 | டீ. அனில்ரெட்டி, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 4 | மல்லாரெட்டி சோமிரெட்டி, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 5 | பி. சப்தய்யா, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 6 | எஸ்.கே.ரஹமான், ஆந்திராபிரதேஷ் | ஆதரவு தெரிவித்தார் |
| 7 | அ. கோபால்ரெட்டி, ஐதராபாத் | ஆதரவு தெரிவித்தார் |

| | | |
|---|---|---|
| 8 | எஸ்.கே. சாரி, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 9 | S. கந்தன், பூனைத்தாங்கல் கிராமம், வெம்பாக்கம், திருவண்ணாமலை | ஆதரவு தெரிவித்தார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.15.09.2023).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (6 பக்கங்கள் 72 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 09 மனுக்கள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை